## பிரித்தானியாவின் நகர்வுகளால்.....



பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை சிறீலங்காவில் நடத்த விடாது தடுத்து, அவுஸ்திரேலியா வில் நடத்துவதற்கு தான் ஏற்பாடு செய்திருப்பதைச் சுட்டிக்காட்டிய பிரித்தானியப் பிரதமர் கோர்டன் பிறவுண், தமது அரசு முடிந்தளவு மேலும் பல அழுத்தங்களை சிறீ லங்கா அரசுக்குக் கொடுக்கும் எனக் கூறினார்.

தமிழ் மக்களின் விருப்பு பற்றி தமிழீழத்தில் கருத்துக் கணிப்பு நடத்துவது பற்றி உலகத் தமிழர் பேரவையின் அங்கத்தவர்கள் சுட்டிக்காட் டியபோது, அதனைத் தமது அரசு மட்டும் தனித்து செய்துவிட முடியாது எனவும், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்தே இதற்கான செயற் பாடுகளில் இறங்க வேண்டும் எனவும் கோர்டன் பிறவுண் கூறினார்.

மாநாட்டில் பங்கேற்றிருந்த பிரமுகர்களில் 30ற்கும் மேற்பட்டவர்கள் உரையாற்றியிருந்தனர். (இவர்களின் விபரங்களை பெட்டிச் செய்தியில் பார்க்கவும்) இவர்களுள் தென்னாபிரிக்காவில் இருந்து வருகை தந்திருந்த, தென்னாபிரிக்க தேசிய கொங்கிரசைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சீசா என்ஜிகிலானா, சிறீலங்காவில் இருந்து வருகை தந்திருந்த பௌத்த துறவியான வணக்கத்திற்குரிய கலாநிதி மாதம்பகம அஸ்ஸஜி திஸ்ஸ நாயக்க தேரோ, மற்றும் இஸ்லாமிய மதகுரு அப்துல் மஜீத் மொஹமட் காசிம் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி அமெரிக்காவின் தெற்கு - மத்திய ஆசியாவிற்கான இராசாங்க அமைச்சரும், முன்னாள் சிறீலங்காவின் அமெரிக்க தூதுவரு மான றொபேட் ஓ பிளேக்கின் பிரதிநிதி, மற்றும் நோர்வே அரசின் பிரதி நிதி ஆகியோரும் நேரடியாக இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

## மாநாட்டில் உரையாற்றியோர்

01. வணக்கத்திற்குரிய அடிகளார் கலாநிதி எஸ்.ஜே.இம்மானுவேல்,
02. அமெரிக்க பிரிதிநிதி அன்றூ தில்லைநாதன்,
03. பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட்
04. பௌத்த துறவியான வணக்கத்திற்குரிய கலாநிதி மாதம்பகம அஸ்ஸஜி திஸ்ஸ நாயக்க தேரோ,
05. பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் கீத் வாஸ்,
06. பிரித்தானிய பன்னாட்டு அபிவிருத்தி அமைச்சர் கரத் தோமஸ்,
07. தாராண்மைவாதக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் கியூஸ்,
08. நாடாளுமன்ற உறுப்பினர் அன்றூ டெஸ்மோர்,
09. நாடாளுமன்ற உறுப்பினர் அண்டி
10. அமெரிக்க பிரதிநிதி கலாநிதி ஏ.ஜெயராஜா (றோபேட் ஓ பிளேக்கின் வாழ்த்து)
11. அமெரிக்க பிரதிநிதி கலாநிதி இளங்கோவன் (பென்சில்வேனிய மாநில செனட்டர் கேசியின் வாழ்த்து),
12. தென்னாபிரிக்க நாடாளுமன்ற உறுப்பினரும், ஆபிரிக்க கொங்கிரசின் நீண்ட கால உறுப்பினருமான சீசா என்ஜிகிலானா,
13. பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சூசன் கிறமர்,
14. பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் எட் டேவி,
15. முன்னாள் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் றொபேட் இவான்ஸ்,
16. பிரான்ஸ் பிரதிநிதி திருச்சோதி,
17. பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் விரேந்திர சர்மா,
18. பிரித்தானிய ஈலிங் நகரசபை உறுப்பினர் ஜீலியன் பெல்,
19. பிரித்தானிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் போல் சீர்,
20. அக்ட்-நவ் (Act-now) அமைப்பின் உறுப்பினர் கிறஹம் வில்லியம்,
21. பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் றையன் (Joan Ryan),
22. அவுஸ்திரேலிய பிரதிநிதி, கலாநிதி சாம்பவி,
23. பிரித்தானிய இளையோர் விவகார அமைச்சர் டோன் பட்லர்,
24. பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் சிபோன் மக்டொனா (Shiobhain McDonagah),
25. பிரித்தானிய எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லீ ஸ்கொட்,
26. பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் அன்றூ பெல்லிங் (Andrew Pelling),
27. கொன்சவேட்டிவ் நிழல் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக் (William Hague).
28. பிரித்தானியப் போக்குவரத்து அமைச்சரும், ருற்றிங் நாடாளுமன்ற உறுப்பினருமான சதீக் கான்

சமையலாளர் / Serveuse தேவை
இலங்கை இந்திய உணவகத்திற்கு
சமையலாளரும் மற்றும் சரளமாக பிரெஞ்சு
மொழி பேசத்தெரிந்த Serveuse தேவை
06 32 12 48 83 / 01 43 86 83 60
224 rue de paris Villeneuve st-Georges

# இந்திய அரசின் நெறிப்படுத்தலில் கூட்டமைப்பின் வேட்பாளர் தெரிவு



சிறீலங்காவிற்கான பொதுத் தேர் தல் பிரச்சாரங்கள் சூடுபிடிக்கத் தொடங் கியுள்ளன. வேட்புமனுத் தாக்கல்க ளும் இடம்பெறத் தொடங்கிவிட்டன. இந்நிலையில், கடந்த காலத் தேர்த லில் ஒற்றுமையோடு செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நான்கு துண் டுகளாக உடைக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெய ரில் ஆர்.சம்பந்தன் குழுவினரும், சிவாஜிலிங்கம், சிறீகாந்தா ஒரு பிரி வாகவும், சிவநாதன் கிஷோர், க.தங் கேஸ்வரி, ச.கனகரட்னம் ஆகியோர் தமிழினப் படுகொலையில் ஈடுபட்ட மகிந்த அரசுடன் கூட்டுச் சேர்ந்தும், ஏனைய தமிழ்த் தேசியத்தை நேசித்த வர்கள் கூட்டமைப்பில் இருந்து வெளி யேற்றப்பட்டும் நான்கு பிரிவுகளாக்கப் பட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்திய அரசாங்கத்தின் ஆலோச னைக்கு அமைவாகவும் நேரடி நெறிப்படுத்தலின் கீழும் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் தெரிவு இடம் பெற்று வருவதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. சிறீலங்காவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் குழு ஒன்று இம்முறை கூட்டமைப்பின் தேர்தல் பணி களை நேரடியாக வழிநடத்தி வருவதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. இந்த குழுவினால் வழங்கப்படும் அறி வுறுத்தல்களுக்கு அமைவாகவே கூட்டமைப்பினர் தேர் தல் பரப்புரைக் கூட்டங்களில் உரையாற்றுவார்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றது. தமிழ் மக்களின் சுயநிர் ணய உரிமை குறித்தும், தமிழ் மக்கள் இலங்கையின் தேசிய இனம் என்பது பற்றியும் கூட்டமைப்பினர் கருத் துக்களை வெளியிடப் போவதில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சிறீலங்கா - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட் டுள்ள விடயங்களை முதன்மைப்படுத்திய தீர்வினையே தமிழ் தேசிய கூட்டமைப்பு கோரவுள்ளது. இந்தியாவின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள உதயன் மற்றும் சுடரொளி ஆகிய பத்திரிகைகள் மூலமாக கூட்டமைப்பினருக்கு ஆதரவான பரப்புரை நடவடிக்கைகளும் தீவிரப்படுத்தப்படவுள்ளன. அப்பத் திரிகைகளின் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் தேர் தலில் வேட்பாளராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என் பதும் குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண ஊடகங்களை கையகப்படுத்தி அங்குள்ள மக்களுக்கு உண்மையான விடயங்களை சென்றடையாதவாறு தடுத்து இந்தத் தேர்தலில் தமது ஆதரவு கட்டுப்பாட்டில் இயங்கும் சம் பந்தர் தலைமையிலான அணியினரை வெல்லவைக் கும் நடவடிக்கையில் இந்தியா இறங்கியுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வடக்கு கிழக்கில் ஐந்து மாவட்டங்களுக்கான வேட்பாளர் நிய மனப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளது. 22 உறுப் பினர்களைக் கொண்டிருந்த கூட்டமைப்பு முன்னாள் உறுப்பினர்களில் 9 பேருக்கு மட்டுமே சம்பந்தர் அனு மதி வழங்கியுள்ளார். சிறீலங்கா ஜனாதிபதித் தேர்த லில் தனித்துப் போட்டியிட்ட ரெலோ உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம், அவருக்கு ஆதரவளித்த என்.சிறீ காந்தா மற்றும் பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திர குமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சொலமன் சிறில் இமாம், எஸ்.ஜெயானந்தமூர்த்தி ஆகியோர் உட்பட 11 பேருக்கு இந்தமுறை போட்டியிட வாய்ப்பளிக்கப்படவில்லை. சிவாஜிலிங்கமும், சிறீகாந் தாவும் தமிழர் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில் புதிய ஓர் அரசியல் கட்சியை உருவாக்கி, புதிய இடதுசாரி முன்னணியின் சார்பில் போட்டியிடு கின்றனர். முன்னாள் உறுப்பினர் ரி.கனகசபை அரசி யலில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

வன்னி மாவட்டத்தில் முன்னாள் உறுப்பினரான செல்வம் அடைக்கலநாதன் முதன்மை வேட்பாளராக வும் மற்றும் நடேசு சிவசக்தி ஆனந்தன், சு.வினோ நோகராதலிங்கம் ஆகியோரும் யாழ்ப்பாண மாவட்டத் தில் முதன்மை வேட்பாளராக மாவை சேனாதிராசாவும்

## சோனியாவின் கொங்கிரஸ் ஆதரவு நடவடிக்கைகளில் சம்பந்தர் என குற்றச்சாட்டு

மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரனும் போட்டியிடுகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் தலைமை வேட்பாளராக தோமஸ் விலியம் போட்டியிட சந்திரநேரு சந்திரகாந் தனும் இடம்பெற்றுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தலைமை யிலும், திருகோணமலையில் கூட்டமைப்பின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் முதன்மை வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

இதேவேளை, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கடந்த கால நடவடிக்கைகள் தொடர்பாக முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், சிறீகாந்தா ஆகியோர் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

தமிழ் மக்களைக் கொலை செய்ய துணைபோன இந்தியாவுக்கு உடந்தையாகவும் சோனியா கொங்கிரஸ் அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்பவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இயங்கியதாக முன்னாள் ஊடகவியலாளர் மாநாட்டின்போது சிவாஜிலங்கம் குற்றம் சாட்டினார். இது தொடர்பாக எந்தவொரு பகிரங்க விவாதத்திற்கும் தான் தயாராக இருப்பதாக அவர் அறிவித்தார்.

இந்த யுத்தத்தை ஆரம்பித்தது இந்தியா தான் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே சொல்லியிருந் தார். உங்களுக்குத் தெரியும், மாவிலாறு பிரச்சினையி லிருந்துதான் இது தொடங்கியது. இந்த நேரத்தில்தான் (2006ம் ஆண்டு) தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தூதுக்குழு இந்தியாவுக்குச் சென்றது. எனினும் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்திக்க முடியவில்லை. அதே ஆண்டு டிசம்பர் மாதம் கூட்டமைப்பின் தூதுக்குழு இந்தியப் பிரதமரை சந்தித்தது. அதன் பின்னர் கிட்டத்தட்ட 28 மாதங்களாக தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் தூதுக்குழு இந்தியாவுக்கு காலடி எடுத்து வைக் கவில்லை. 2007ம் ஆண்டு கிட்டத்தட்ட 15ற்கும் அதிக மான வெளிநாடுகளுக்குச் சென்று யுத்தத்தை நிறுத்து மாறு கோரிக்கை விடுத்த மூவரும் (இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா) இந் தியாவுக்கு செல்லாததன் காரணம் என்ன?

அவர்களின் குடும்பத்தினர் இந்தியாவில் தான் வசிக்கிறார்கள். இந்தியாவுக்கு சென்றபோதும் மறந்தும்

(31ம் பக்கம் பார்க்க)